அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

நன்றி தெரிவிக்கும் கடிதம்

பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

- பிலிப்பி பட்டணம் மகா அலெக்ஸாண்டரின் தப்பனாரான மசிடோனியா அரசனான 2ம் பிலிப்புவின் பெயரால் பெயரிடப்பட்டது.
- இது செழிப்புள்ள ரோம குடியேற்ற பட்டணமாக திகழ்ந்தது. அதாவது பிலிப்பி பட்டணத்தின் குடிமக்கள் ரோமகுடிமக்களாகவே கருதப்பட்டார்கள்.
- அவர்கள் ரோம குடியுரிமை பெற்றிருந்ததால் அதை பெருமையாக கருதினார்கள் (பார்க்க அப்.16:21). இதையே பவுல் பரலோகத்தின் குடியுரிமையோடு ஒப்பிடுகிறார் (3:20-21)
- பிலிப்பி பட்டணத்தில் இருந்தவர்களில் பலர் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். எல்லை நகரமான பிலிப்பியில் இராணுவத்தை வைத்திருப்பதற்காக இவர்களுக்கு நிலங்கள் அங்கே வழங்கப்பட்டது.
    - அதிகாரங்கள் 4
    - வசனங்கள் 104

பின்னணி

- பவுல் தனது இரண்டாவது மிஷனரிப்பயணத்தின்போது இந்தப் பட்டணத்தில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து ஊழியம் செய்தார்.
- அப் 16:13-15 பிலிப்பி பட்டணத்தின் யூதரின் ஜெபாலயத்தில் குறைவான யூதர்களே இருந்ததால் பவுலும் அவரைச் சோந்தவர்களும் பட்டணத்திற்கு வெளியே இருந்த ஆற்றங்கரைக்குச் சென்று அங்கு வந்திருந்த பெண்களுக்கு பேசினார்கள். அந்தப் பெண்களில் ஒருத்திதான் லீதியாள். அவள் இரத்தாம்பர துணி வியாபாரம் செய்யும் வசதியான நிலையிலுள்ளவளாக இருந்ததால் தனது வீட்டை பவுலுக்கும் அவரது உடன்ஊழியர்களுக்கும் திறந்து கொடுத்தாள். (இரத்தாம்பர ஆடையை ரோமர்களில் முக்கியத்துவம் உள்ளவர்கள் மாத்திரமே அணிய முடியும்).
- பவுல் மீண்டும் தனது மூன்றாவது மிஷனரிப்பயணத்தின்போது கொஞ்சநாட்கள் இந்த பட்டணத்தில் தங்கியிருந்தார் (அப் 20:6)
- அப் 16:16-40 பிலிப்பி பட்டணத்தில் இருந்தபோது பிசாசு பிடித்திருந்த பெண் பவுலையும் அவரது உடன்ஊழியர்களையும் தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். பவுல் கோபமுற்று அவளிடம் இருந்த பிசாசை துரத்தியதினால் அவளால் ஆதாயம் அடைந்துகொண்டிருந்த அவளது எஜமானர்கள் தங்கள் ஆதாயம் அற்றுப்போனதால் பவுல் மீது கோபம் கொண்டார்கள்.
- பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையின் உட்காவலறையில் அடைக்கப்பட்டாகள். நடுஇரவில் பலமான பூமியதிர்ச்சி உணடானதால் பவுலும் சீலாவும் கட்டுக்களிலிருந்து விடுதலையானார்கள். சிறைச்சாலைக்காரனும் அவனது முழுக்குடும்பமும் விசுவாசிகளாகி ஞானஸநானம் பெற்றார்கள்.

பின்னணி

- பவுல் எழுதிய நான்கு சிறைச்சாலை நிருபங்களில் கடைசியாக எழுதப்பட்டது பிலிப்பியருக்கான நிருபம். பவுல் தனது ரோம சிறையிருப்பின் கடைசிக்காலத்தில் அதை எழுதினார் கிபி 61 அல்லது 62.
- பவுல் எபேசு, கொலோசே,பிலமோன் நிருபங்களை அவைகள் ஒன்றுக்கு பக்கத்தில் மற்றொன்று அமைந்திருந்த ஊர்களாயிருந்ததால் தீகிக்குவின் வசத்தில் கொடுத்தனுப்பினார்.
- பிலிப்பிய நிருபத்தையோ பவுலை ரோமாபுரியில் சந்தித்து பிலிப்பிய சபையார் கொடுத்தனுப்பிய பணஉதவியை தருவதற்கு வந்த எப்பாபிராதீத்துவின் வசம் கொடுத்தனுப்பினார் (2:25,4:18).
- ஆனால் ரோமாபுரியில் இருக்கும்போது எப்பாபிராதீத்து வியாதிப்பட்டதினால் அவன் திரும்புவது தாமதப்பட்டதுடன், நிருபம் போய்ச்சேர்வதும் தாமதப்பட்டது (2:26-27)
- பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் கலாத்தியர், கொலோசேயர்களுக்கு எழுதியதுபோல எந்த பிரச்சினை குறித்தும் எழுதவில்லை.
- மாறாக பிலிப்பிய விசுவாசிகளை பாராட்டி அவர்கள் மீதிருந்த அன்பை விபரித்து எழுதினார்.

பிலிப்பிய நிருபத்தின் சுருக்கம்

- மற்ற எந்த சபையின் விசுவாசிகளைக்காட்டிலும் பிலிப்பி பட்டண விசுவாசிகள் பவுலின் ஊழியத்திற்கு அதிகமாக பொருளாதார உதவிகள் செய்தார்கள் (2கொரி 8:11: பிலி 4:15-18)
- ரோமாபுரியில் பவுல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை அறிந்த பிலிப்பிய சபையார் செய்த உபகாரத்திற்கு நன்றி சொல்லுவதே இந்த நிருபத்தின் நோக்கமாயிருந்தது (1:5,4:10–19).
- ஆயினும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி

1. அவரது சொந்த சூழ்நிலையை எடுத்துரைக்கிறார் (1:12–26,4:10–19)
2. சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாய் இருந்தாலும், உபத்திரவத்தை உறுதியோடு எதிர்கொண்டு மகிழ்ந்திருக்க பிலிப்பிய சபையை உற்சாகப்படுத்துகிறார் (1:27–30,4:4)
3. தாழ்மையாயிருக்க, ஐக்கியமாயிருக்க வலியுறுத்துகிறார் (2:1–11,4:2–5)
4. தீமோத்தேயுவையும், எப்பாபிராதீத்துவையும் பிலிப்பிய சபைக்கு முன்பாக புகழ்ந்துரைக்கிறார் (2:19-30)
5. யூதசட்டவாதிகளையும், அவர்கள் மத்தியில் இருந்த பொல்லாத வேலையாட்களுக்கும் (லிபத்தீனியர்களையும்) குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லுகிறார் (அதி 3)

- பிலிப்பிய நிருபம் நான்கு அதிகாரங்களை கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு முக்கிய கருத்தை கொண்டிருக்கிறது

அதிகாரம் 1 - கிறிஸ்து எனக்கு ஜீவன் 1:21

அதிகாரம் 2- கிறிஸ்து எனது உதாரணம் 2:5

அதிகாரம் 3- கிறிஸ்து எனது நம்பிக்கை 3:7

அதிகாரம் 4- கிறிஸ்து எனது பெலனும் ஆதாரமும் 4:13

அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் வேதபகுதிகள்

பிலி 1:5 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி

பிலி 1:21 கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

பிலி 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு

பிலி 4:4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயி ருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

பிலி 4:6-7 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

பிலிப்பிய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

1. வாழ்த்து 1:1-2
2. நன்றி சொல்லலும், ஜெபித்தலும் 1:3-11
3. பவுலின் சிறைவைப்பும் எதிர்ப்பும் 1:12-18
4. பவுலின் விடுதலையின் எதிர்பார்ப்பு 1:19-26
5. சுவிஷேசத்திற்கேற்ற நடத்தை குறித்த வியாக்கியானம் 1:27-2:18
   - ஒரே ஆவியில் உறுதியாயிருத்தல் 1:27-30
   - கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றி ஒருமனமாயிருத்தல் 2:1-11
   - உலகத்திற்கு ஒளியாக பிரகாசித்தல் 2:12-18
6. தீமோத்தேயுவையும், எப்பாபிராதீத்துவையும் குறித்த திட்டம் 2:19-30
   - தீமோத்தேயுவை சீக்கிரமாய் அனுப்புதல் 2:19-24
   - எப்பாபிராதீத்துவை உடனடியாக அனுப்புதல் 2:25-30
7. யூதர்களுக்கும், பொல்லாத வேலையாட்களுக்கும் எச்சரிக்கையாய் இருத்தல் (3:1-21)
   - யூதர்களுக்கு எதிராக 3:1-11
   - பொல்லாத வேலையாட்களுக்கு எதிராக 3:12-21
8. ஐக்கியம், சந்தோஷம், சமாதானம் குறித்த வியாக்கியானம் 4:1-9
   - எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுதல் 4:1-3
   - சந்தோஷம், சமாதானம் குறித்த வியாக்கியானம் 4:4-9
9. அவர்களது உதாரத்துவத்திற்காக நன்றி சொல்லுதல் 4:10-19
   - அவர்கள் அளித்த உதவி பவுலுக்கு மகிழ்ச்சியை தந்தது 4:10-14
   - அவர்கள் அளித்த உதவி அவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவரும் 4:15-19

முடிவுரை 4:20-23